**தலைப்பு 11 – நிதி ஆணைக்குழு அலுவலகம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 11 – நிதி ஆணைக்குழு அலுவலகத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள், மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2016 செப்தெம்பர் 19 ஆம் திகதி ஆணைக்குழுவின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டனவாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்துச் செல்லல் என்பன இப்பொறுப்பில் உள்ளடங்கும்.

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**மொத்த நிதிஏற்பாடும் செலவும்**

ஆணைக்குழு அலுவலகத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 43.00 மில்லியனாக இருந்ததுடன் அதில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 38.06 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், ஆணைக்குழு அலுவலகத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதி ஏற்பாடுகளில் ரூபா 4.94 மில்லியன், அதாவது, 11.49 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக, சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதிஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழும் | 38.50 | 36.04 | 2.46 | 6.38 |
| மூலதன | 4.50 | 2.02 | 2.48 | 55.11 |
| மொத்தம் | 43.00 | 38.06 | 4.94 | 11.49 |

**2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

ஆணைக்குழு அலுவலகத்திற்குரிய விடய இலக்கம் 01101 இன் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 3.21 | 1.02 | 1.01 | 2.30 | 12.00 | 4.78 |

**2.3 பொது வைப்புக் கணக்குகள்**

ஆணைக்குழு அலுவலகத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான 2 பொது வைப்புக் கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 50,050 ஆகும்.

**2.4 கணக்காய்வு அவதானிப்புகள்**

ஆணைக்குழு அலுவலகத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்ட பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புகளுக்குட்படத் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அந்த முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புகள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**3. பொருண்மையானதும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்**

**3.1 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

2015 ஆகஸ்ட் 03 ஆந் திகதி முதல் ஆணைக்குழு அலுவலகத்தில் சேவையாற்றுகின்ற உத்தியோகத்தர்களுக்கு அவர்களது மாதாந்தத் திரட்டிய சம்பளத்தில் ¼ படி வழங்கப்படுவதுடன், ஒப்பந்த அடிப்படையில் சேவையாற்றுகின்ற இரண்டு உத்தியோகத்தர்களுக்கும் அந்தப் படி செலுத்தப்பட்டிருந்தது.

**3.2 செயலாற்றல்**

2015 இன் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் ஆணைக்குழுவின் செயல் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) ஒன்பது மாகாண சபைகளுக்காக ஆணைக்குழு உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்பட்ட 2014 ஆம் ஆண்டின் கணக்காய்வு அவதானிப்புகள் தொடர்பாக ஆணைக்குழுவின் சிபாரிசுகளைச் சமர்ப்பிக்கும்போது, வடக்கு, தெற்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்காக சிபாரிசுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மாகாணங்களின் செயல் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களில் பங்கு பற்றும்போது மீளாய்வாண்டில் மத்திய மாகாணத்திற்காக நியமிக்கப்பட்ட பெண் உத்தியோகத்தர் அதில் பங்குபற்றாதிருந்ததுடன் தெற்கு, வடமேல், ஊவா, சப்பிரகமுவ மற்றும் கிழக்கு மாகாணங்களுக்காக உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.5 மனிதவள முகாமைத்துவம்**

---

**பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.**

(அ) ஆட்சேர்க்கப்பட்ட மிகை ஊழியர்களின் எண்ணிக்கை தொடர்பாக முறையான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு ஆணைக்குழு அலுவலகம் தவறியிருந்தது.

(ஆ) ஆணைக்குழுவினால் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிரந்தரப் பதவிக்காக ஒப்பந்த அடிப்படையில் உத்தியோகத்தர் ஒருவர் சேர்க்கப்பட்டிருந்தார்.